PlanetRead

Literacy for a Billion

Movie: Ilakkanam
Year: 2007

Song: Unakka
Lyricist: Chandiraseyan

உனக்கே எனதாவியும்
உள்ளமும் தந்தேன்
உள்ளத்தில் ஓர் ஆலயம்
செய்துனை வைத்தேன்
உனக்கே எனதாவியும்
உள்ளமும் தந்தேன்
உள்ளத்தில் ஓர் ஆலயம்
செய்துனை வைத்தேன்
நிலத்தே இனி
நீ எனதெல்லாம்
என நினைத்தால்
நீங்காது இன்பம்
இனி தனக்கே என வாழாமல்
எனை தருவேன்
தருவேன் எனதுயிரே
உனக்கே எனதாவியும்
உள்ளமும் தந்தேன்
உள்ளத்தில் ஓர் ஆலயம்
செய்துனை வைத்தேன்
ஒரு நேரம் வேரானாய்
மறுநாளில் வேறானாய்
உயிர்பூக்கள் பூத்திடவே
நிலம்தன்னில் நீரானாய்
ஒரு நேரம் வேரானாய்
மறுநாளில் வேறானாய்
உயிர்பூக்கள் பூத்திடவே
நிலம்தன்னில் நீரானாய்
கடல் வானம் காற்றெனவே
கலந்தே என் வாழ்வானாய்
கடல் வானம் காற்றெனவே
கலந்தே என் வாழ்வானாய்
உனக்கே எனதாவியும்
உள்ளமும் தந்தேன்
உள்ளத்தில் ஓர் ஆலயம்
செய்துனை வைத்தேன்

கருவிழியின் பாவைதனை
இடம் மாற்றி நீ அமர்ந்தாய்
நெடுவழியின் தோழியென
துணை வந்து நீ சேர்ந்தாய்
கருவிழியின் பாவைதனை
இடம் மாற்றி நீ அமர்ந்தாய்
நெடுவழியின் தோழனென
துணை வந்து நீ சேர்ந்தாய்
நிழல்போல நீங்காமல்
நீ எந்தன் உறவானாய்
நிழல்போல நீங்காமல்
நீ எந்தன் உறவானாய்
உனக்கே எனதாவியும்
உள்ளமும் தந்தேன்
உள்ளத்தில் ஓர் ஆலயம்
செய்துனை வைத்தேன்
நிலத்தே இனி
நீ எனதெல்லா.ம்
என நினைத்தால்
நீங்காது இன்பம்
இனி தனக்கே என வாழாமல்
எனை தருவேன்
தருவேன் எனதுயிரே

உனக்கே எனதாவியும்
உள்ளமும் தந்தேன்
உள்ளத்தில் ஓர் ஆலயம்
செய்துனை வைத்தேன்

*Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.*

*PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.*